# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 05, 2024

Weekly E-paper ● October 05, 2024




# மீண்டும் சனாதன சர்ச்சை!

சுப. வீரபாண்டியன்

## பேரவைச் செய்திகள்

## இஸ்ரேல் - அமெரிக்கா, ஈரான்?!

தலையங்கம்

## புஸ்வாணம் ஆனது சந்திரபாபு போட்ட லட்டு!

அறம்மதி

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 05, 2024 Weekly E-paper ● October 05, 2024

# மீண்டும் சனாதன சர்ச்சை!

சுப. வீரபாண்டியன்

ஆந்திராவின் துணை முதலமைச்சர் பவன் கல்யாண், தன்னை ஒரு சர்வாதிகாரி போலக் கருதிக்கொண்டு இந்தியாவிலே இருக்கிற எல்லோரையும் மிரட்டுகிறார். சனாதனம் பற்றிப் பேசுவதற்கு முன்னால் ஆயிரம் முறை யோசிங்கள் என்கிறார். சனாதனத்தை அழிப்பேன் என்று யாராவது சொன்னால், அவர்கள் அழிந்து போவார்கள் என்று வேறு அச்சுறுத்துகிறார்.



அவர் மறைமுகமாக - இல்லை யில்லை, நேரடியாகவே யாரைச் சொல்கிறார் என்பது எல்லோருக்கும் புரிகிறது. சனாதனம் ஒரு கொசுவைப் போல, டெங்குவைப் போல - அதனை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன தமிழ்நாட்டின் இன்றைய துணை முதலமைச்சர் உதயநிதியைத்தான் அவர் மிரட்டுகிறார் என்பது புரிகிறது. இந்தச் சலசலப்புக்கு எல்லாம் ஒரு நாளும் அஞ்சுகிறவர் இல்லை உதயநிதி!



மிக நிதானமாக, சிரித்த முகத்தோடு, "அப்படியா.... பொறுத்திருந்து பார்க்கலாம்!" என்று விடை கூறி இருக்கிறார், நம் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்!

சனாதனத்தைப் பற்றி யாரும், எதுவும் பேசவே கூடாது என்று மிரட்டும் பவன் கல்யாண் ஆனாலும் சரி, மற்றவர்கள் ஆனாலும் சரி, இன்று வரையில் சனாதனம் என்றால் என்ன என்னும் ரகசியத்தை மட்டும் சொல்லவே இல்லை! அது பற்றிய விளக்கம் எந்தப் புத்தகத்தில் இருக்கிறது, இந்து மதம், வருணாசிரமம், சனாதனம், அனாதி மதம் இவைகளுக்கு இடையில் எல்லாம் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதைப் பவன் கல்யாண் சொல்ல வேண்டும்!

1905 ஆம் ஆண்டு பனாரஸ் இந்து பல்கலைக்கழகமும், 1926 ஆம் ஆண்டு ரெங்கசாமி ஐயங்கார் ஆகியோர் சனாதனம் பற்றி விளக்கியுள்ளனர். இரண்டிலும் சனாதனம் என்பது வர்ணாசிரமம் என்பதற்கு மிக நெருக்கமான இடத்தில்தான் இருக்கிறது!

வருணாசிரமம் என்றால் என்ன என்று நாம் அறிவோம். அந்தச் சொல்லின் வேராக இருக்கும் வருணம் என்பது மனிதர்களைப் பிறப்பின் அடிப்படையில், மேல், கீழ் என்று பிரிப்பது. வருண அடிப்படையில்தான் ஒருவன் பிராமணன் என்றும், இன்னொருவன் சூத்திரன், பஞ்சமன் என்றும் சொல்லப்படுகிறான். காலகாலத்திற்கும் மாறாத இந்த இழிவை வருணாசிரமம்தான் நம் மீது திணிக்கிறது. அதை நாம் ஏன் ஏற்க வேண்டும்?

எதிர்ப்போம்! எந்தக் கோட்பாடு நம்மை இழிவு படுத்துகிறதோ, அதைச் சாகும் வரை எதிர்ப்போம்! வருணாசிரமத்தை எதிர்ப்பவர்கள் அழிந்து போவார்கள் என்று பவன் கல்யாண் சொன்னால், அதற்கு ஒரே ஒரு விடைதான் இருக்கிறது. அது நம் உதயநிதி சொல்லி இருக்கிற, "பொறுத்திருந்து பார்ப்போம்!" என்பதுதான்! ●

# சேலத்தில் "வீரமுழக்கம்" பொதுக் கூட்டம்





சேலத்தில் 29-09-2024 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடைபெற்ற 'வெற்றிச் சங்கிங்கின் வீரமுக்கம்' பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் இரா.பா.சுந்தரவதனம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைப் பொதுச்செயலாளர் காசு. நாகராசன், சட்டமன்ற உறுப்பினர் இரா.ராஜேந்திரன், மேயர் ஆ.இராமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 'கலைஞர் நாட்குறிப்பு' வெளியீட்டு விழா













'கலைஞர் நாட் குறிப்பு' நூல் வெளியீட்டு விழா 30-09-2024 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு தலைமையில் நடைபெற்றது. கூடலூர் நகராட்சித் தலைவர் அ.அறிவரசு முன்னிலையில் மாண்புமிகு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் நூலை வெளியிட, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். கலைஞர் நாட்குறிப்பு, தொகுப்பாளர் காசு. நாகராசன் நன்றி கூறினார். விழா ஏற்பாட்டை SAPOS அமைப்பினர் செய்திருந்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இஸ்ரேல் – அமெரிக்கா, ஈரான்?!

பாலஸ்தீன நாட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து சியோனிஸ்டுகளால் உருவாக்கப்பட்ட இஸ்ரேல், பாலஸ்தீனத்தை மட்டுமல்லாமல் ஈரானுடனும் பகைமை காட்டி வருகிறது.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்புல்லா, அமாஸ் அமைப்புகள் இஸ்ரேல்மீது குறிப்பாக டெல்அவி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துகிறது. பதிலுக்கு இஸ்ரேலும் காசா, லெபனான் மீது தாக்குதல் நடத்துகிறது.

அதேசமயம் மத்தியகிழக்கு நாடுகளிடையே தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட இஸ்ரேலும், ஈரானும் முயல்கின்றன. அண்மையில் இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலில் லெபனானின் சக்தி வாய்ந்த ஆயுத அமைப்பான இஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா உயிரிழந்தார்.

இதனால் தன் பகைநாடான இஸ்ரேல்மீது ஏறத்தாழ 400 ஏவுகணைகளை அனுப்பிக் கடும்தாக்குதலை ஒரே இரவில் நடத்தியது ஈரான்.

உடனே இஸ்ரேலைக் காப்போம், அதற்கு ஆயுதங்கள் கொடுப்போம், அமெரிக்கப் படைகள் ஈரானுக்கு எதிராகத் தயாராகட்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோபைடன் உத்தரவிட்டுள்ளார். ஈரானுக்கு ரஷ்யா ஆதரவு கொடுக்கும் என்று தெரிகிறது. இனி ஈரானுக்கு ஆதரவாக எந்தெந்த நாடுகள் அணிவகுக்கும் என்பது தெரியவில்லை.

ஐ.நா பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடுகிறது, இதுகுறித்துப் பேச. அது பயன் தருமா என்று தெரியவில்லை. அதேசமயம் ஐ.நா பொதுச் செயலாளர் இஸ்ரேலுக்குள் நுழையத் தடை விதித்துள்ளது அந்நாடு. மொத்தத்தில் அமைதியற்ற போர்ச்சூழலில் மத்திய கிழக்கு நாடுகள் இருக்கின்றன என்பது பெரும் கவலையைத் தருகிறது.

நவீன போர்க் கருவிகள் மூலம் தொலைதூரத் தாக்குதல்கள் நடத்தும் போது அங்கு முதியோர்,' பெண்கள், குழந்தைகள் என மக்கள் கொல்லப் படுவதும், ஊனம் உறுவதும், உறவுகளை இழப்பதும் எவ்வளவு கொடுமையானது. இது மனித உரிமை மீறலாகும்.

போரைத் தொடர விரும்பவில்லை என்கிறது ஈரான். விடமாட்டோம் ஈரானை என்கிறது இஸ்ரேல். உலக நாடுகள் இந்தப் போர்ப் பதற்றத்தைத் தடுத்து அமைதிகாண முயற்சிகளைச் செய்ய முன்வர வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் சொல்கிறார், "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்".

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## பேச வைத்த பெரியார் – நூல் வெளியீடு





28-09-2024 அன்று கோவை, சூலூரில் நடைபெற்ற 'பேச வைத்த பெரியார்' நூல் வெளியீடு நிகழ்ச்சியில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், சிற்பி செல்வராஜ், ஆ.சிங்கராயர், காசு. நாகராசன், புலவர் செந்தலை கவுதமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புஸ்வாணம் ஆனது சந்திரபாபு போட்ட லட்டு!

**அறம்மதி**

மாட்டுக் கொழுப்பு தீட்டாம்; மாட்டு மூத்திரம் தீட்டைக் கழிக்கும் புனித நீராம். இவ்வளவு மூடநம்பிக்கை மலிந்து காணப்படும் நாட்டில் மத அரசியல் செய்வது எளிது. ஆனால் அது பொறுப்பற்ற செயல்.

உறுதி செய்வதற்கு முன்னரே விலங்குக் கொழுப்பு திருப்பதி லட்டில் கலந்து இருப்பதாகப் பொதுவெளியில் சொன்னார் ஆந்திர முதல்வர் சந்திரபாபு. அவரை நோக்கி, நீங்கள் கடவுளை வைத்து மதஅரசியல் செய்கிறீர்கள் என்று உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. முன்னதாக சந்திரபாபு, திருப்பதி லட்டில் மாட்டுக்கொழுப்பு, பன்றிக் கொழுப்பு, மீன் எண்ணெய் போன்றவை கலந்திருக்கின்றன என்று ஆந்திர முன்னால் முதல்வர் ஜகன்மோகனைக்குறி வைத்துப் பேசியிருந்தார்.



அதற்கு ஆன்மீகச் சொற்பொழிவாளர் சுகி.சிவம், கடவுள் விவகாரத்தில் சந்திரபாபு அரசியல் செய்கிறார் என்றும், மக்களிடம் உள்ள மென்மையான உணர்வுகளைச் சீண்டுகிறார், இது மிகவும் "சென்சிடிவான பிரச்சனை" என்றும் கூறியிருக்கிறார்.

ஜெகன் மோகனுக்கு எதிராக, தற்போதைய முதல்வர் சந்திரபாபு தொடங்கிய அரசியல் விளையாட்டில், சந்திரபாபுவையே முந்தி முன்னிலை பெறுமளவில் துணை முதல்வர் பவன்கல்யாண் செயல்பாடுகள் வேடம் எடுக்கின்றன. மாட்டுக் கொழுப்பு கலந்ததற்கு 11 நாள் தவம் செய்யப் போவதாகவும், காவி உடை அணிந்தும், கோயில் படிகளைத் துடைத்துப் பெருமாளிடம் மன்னிப்பு கேட்கப் போவதாகவும் அறிவித்தார். தன்னை சனாதனக் காவலராக மாற்றிக் கொண்டு அது குறித்துப் பேட்டியும் கொடுத்து வருகிறார். ஆனால் சனாதன முறைப்படி இவரே கோயில் கருவறைக்குள் போக அருகதை இல்லாதவர் என்பது அவருக்குத் தெரியாதா ?

நடிகர் கார்த்தி, கண்ணா லட்டு தின்ன ஆசையா என்று ஒரு நகைச்சுவை காட்சியில் நடித்திருப்பார். அதுகுறித்த செய்தியாளர்கள் கேள்விக்கு "நோ கமன்ட்" என்று விடை சொல்லமறுத்தார். உடனே பவன்கல்யாண் "வார்னிங்" கொடுத்து கார்த்தியை மன்னிப்புக் கேட்க வைக்கப்பட்டார். : (திருப்பதி) லட்டைப் பற்றியே யாரும் பேசக்கூடாது என்ற நிலைக்குக் கொண்டு சென்று உள்ளார் பவன்.

அதேசமயம் நடிகரும், சமூக செயல்பாட்டாளருமான பிரகாஷ்ராஜ், இவர்கள் மிரட்டலுக்கு அஞ்சாமல், தொடர்ந்து இதனை எதிர்த்துக் கேள்வி கேட்டு வருகின்றார். குற்றம் நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள், லட்டை வைத்து மத-அரசியல் நாடகங்களில் நடித்து வருவதை அவர் சாடியுள்ளார். பவன் கல்யாண் தேர்தலுக்கு முன் மதசார்பற்ற வேடமும், தேர்தலுக்குப் பின் சனாதனக் காவலர் வேடத்தையும் போடுவதைச் சுட்டிக்காட்டி, பவன் கல்யாணின் உண்மை ரூபம் என்ன என்றும் பிரகாஷ்ராஜ் பகுத்தறிவுச் சிந்தனையுடன் வினவியுள்ளார்.

இதுகுறித்துத் திருப்பதி தேவஸ்தானமோ, மோடி, அமித்ஷாக்களோ எதுவும் கண்டு கொள்ளவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

சந்திரபாபுவின் லட்டு மத-அரசியல் உச்சநீதிமன்றத்தால் கண்டிக்கப் பட்டது என்பதுடன், திருப்பதியில் இப்பொழுதும் லட்டு அமோகமாக விற்கப்படுகிறது என்ற செய்தியும் வருகிறது.

திருப்பதி லட்டில் சந்திரபாபு கலந்த 'கொழுப்பு'க் கதை, புஸ்வாணம் ஆகிவிட்டது. ●

